உ

சிவமயம்.

# மதுரைக்

கண்ணங்கூத்தனார் செய்த

# கார் நாற்பது.

இஃது

உரையுடன்

சண்முகசுந்தரமுதலியா

ரவர்களாற் பரிசோதித்து

திரிசிரபுரம் புத்தகவியாபாரம்

சபாபதிபிள்ளை

யவர்களது

மங்கைவார்குழலாம்பாள் அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

மிதுனரவி.

சிந்தாத்திரிப்பேட்டை சாமிநாயக்கர்வீதி-௩௬-நெம்பர்

சங்கமருவியப்பதினெண்கீழ்க்கணக்காவன
நாலடிநான்மணிநானாற்பதைந்திணைமுப்
பால்கடுகங்கோவைபழமொழி-மாமூல
மெய்ந்நிலைகாஞ்சியோடேலாதியென்பவே
கைந்நிலையவாங்கீழ்க்கணக்கு.

வெண்பாவாம்.

உ

சிவமயம்.

# கார் நாற்பது மூலமும் உரையும்.

பொருகடல்வண்ணன்புனைமார்பிற்றார்போற் ... *
றிருவில்விலங்கூன்றித்தீம்பெயறாழ ... ... ... *
வருதுமெனமொழிந்தார்வாரார்கொல்வானங் ... *
கருவிருந்தாலிக்கும்பொழுது. ... ... ... ... *

(தோழிதலைமகட்குப் பருவங்காட்டி வற்புறீஇயது)

எ-து பொருகடலினது நிறம்போன்ற நிறத்தினையுடையான் புனைந்தமார்பிற் பூமாலைபோல விந்திரவில் விலங்காகவூன்றி இனியபெயல்விழாநிற்க வருவேமென்றுசொலலினர் வாராரோ மழைகருக்கொண்டிருந்து துளிகளைவிடாநின்றகாதலன். (க)

கடுங்கதிர்நல்கூரக்கார்செல்வமெய்த
நெடுங்காடுநேர்சினையீனக்-கொடுங்குழா
யின்னேவருவர்நமரென்றெழில்வான
மின்னுமவர்தூதுரைத்து.

(இதுவுமது.)

எ-து பகலோனுடைய கடுங்கதிர்கள்வறுமையுறக் கார்காலஞ்செல்வமுற நெடியகாடெல்லாமிகப்பய

ன்றாக் கொடுங்குழையையுடையாய் நமரிப்பொழுதே
வருவரென் றெழிலையுடையமுகின் மின்னாநின்ற தவர்
தூதாயறிவித்து. (௫)

வரிநிறப்பாதிரிவாடவளிபோழ்ந்த
விரமணற்றண்புறவினாலி-புரள
வுருமிடி வானமிழிய வெழுமே
நெருநலொருத்திதிறத்து.

(பருவங்கண்டழிந்த, தலைமகளாற்றல்வேண்டி
தோழிதனதாற்றாமைதோன்றவுரைத்தது.)

ஏ-து வரிநிறத்தையுடையபாதிரிப்பூ வாடும்வகை காற்றூடறுக்கப்பட்டிளமணலையுடையதண்புறவின்கணாலங்கட்டிபுரள வுருமிடிக்குமுகிலிழிதராநின்றதெழாநின்றது. நெருநல் மையலாளொருத்திமாட்டு வருந்துவான்வேண்டி-எ-று. அல்லது உநெருநற்றே தொடங்கித் தனியாண்மாட்டென்றுமாம். (௬)

ஆடுமகளிரினமஞ்ஞையணிகொள
காடுங்கடுக்கைகவின்பெறப்பூத்தன
யாடுவண்டூதும்பருவம்பணைத்தோளி
வாடும்பசலை மருந்து

(பருவங்காட்டித்தலைமகளைவற்புறுத்தியது.)

ஏ-து கூத்தாடுமகளிரேபோல மயில்களழகுபெறக் காடுகளுங்கொன்றைகளானழகுபெறப் பூத்தன

அப்பூக்களைப்பாடுவண்டுகளூதாநின்றன, ஆதலாம்பனைத்தீதாளி வாடும்பசலைக்குமருந்திப்பருவம்-எ-று(

இகழுநர்ச்சொல்லஞ்சிச்சென்றார்வருதல்
பகழிபோலுண்கண்ணாய் பொய்யன்மையீண்டைப்
பவழஞ்சிதறியவைபோலக்கோபம்
தவழுந்தகையபுறவு.

(இதுவுமது)

எ-து இகழ்வார்சொல்லஞ்சிப் பொருட்குச்சென்றார்வருதலம்புபோன்றவுண்கண்ணாய்பொய்யன்மையாம். இவ்விடத்துச் சிதறியபவழம்போலக் கோபங்கள்பரக்குந்தகைமையையுடையவாயின காடுகளாதலான். (௮)

தொடியிடவாற்றுதொலைந்ததோணோக்கி
வடுவிடைபோழ்ந்தகன்றகண்ணாய்வருந்தல்
கடிதிடிவானமுரறு நெறியிடைச்
சென்றாரைநீடின்மினென்று

(இதுவுமது.)

எ-து வளையிடுதற்குச்செய்யாவாய்த் தளர்ந்ததோளைநோக்கி மாவடுவினடுவேபோழ்ந்தாற்போல வகன்றகண்ணினையுடையாய்வருந்தாதொழி, கடிதிடிக்குமழைமுழங்காநின்றது கொடியவழிச்சென்றாரை நீடாதொழியினென்றுசொல்லி—எ-று. (௯)

நச்சியார்க்கீதலுநண்ணார்த்தெறுதலுந்
தச்செய்வான்சென்றார்வருஉந்தளிரியலாய்
பொச்சாப்பிலாதபுகழ்வேள்வித்தீப்போல
வெச்சாரு மின்னு மழை.

(இதுவுமது.)

எ-து தம்மைநச்சியார்க்கீதலும் பகைவரைக்கெடுத்தலும் இவ்விரண்டுந்தம்மை விலைசெய்துவனவாக நினைத்துப்பொருட்குச்சென்றாரைக் கொண்டுவருந தளிர்ந்தவியல்பினையுடையாய் மறப்பில்லாதபுகழையுடைய வேள்வித்தீப்போல வெம்மருங்குமின்னுகின்றமழை-என்றவாறு, (எ)

மண்ணியன்ஞாலத்துமன்னும்புகழ்வேண்டிப்
பெண்ணியனல்லாய்ப்பிரிந்தார்வரல்கூறுங்
கண்ணியலஞ்சனந்தோய்ந்தபோற்காயாவு.
நுண்ணரும்பூழ்த்த புறவு.

(இதுவுமது.)

எ - து மண்ணியன்றவுலகத்துநிற்கும்புகழைவேண்டியபெண்ணியல்லையுடையநல்லாய் நலமாயப்பொருட்குப்பிரிந்தார் வருதலைச்சொல்லாநின்றது, கண்ணிற்பெயற்றப்பட்ட வஞ்சனத்தைத்தோய்ந்தனபோலக்காயாக்களும் நுண்ணியவரும்புகளை மலரப்பட்டபுறவுகள்—எ-று. (அ)

கருவிளைதண்மலர்போற்பூத்தனகார்க்கேற்
றெரிவனப்புற்றனதோன்றி-வரிவளை
முன்கையிறப்பத்துறந்தார்வரல்கூறு
மின்சொற்பலவு முரைத்து.

(இதுவுமது.)

எ-து கருவிளைகளுந் தண்மலர்போலப் பூத்தன கார்ப்பருவத்திற்கெதிர்ந்தெரியினது வனப்பையுற்றன தோன்றிப்பூக்களும் வரியையுடையவளைகண் முன்கையினின்றுநீங்க வின்சொற்பலவுமுரைத்துப்போயினர் வருதலை லின்றன. (௯)

வானேறுவானத்துரறவயமுர
ணானேற்றொருத்தலதனோடெதிர்செறுப்ப
கான்யாற்றொலியிற்கடுமான்றேரொண்டொடி
மேனிகுளிர்ப்பவரும்.

(இதுவுமது.)

எ - து மழையேறு முகிலின்கணின்றொலிப்ப வலியையுடைய முரணையுடைய வானேறாகியவொருத்தல வ்வுருமேற்றொடெதிராகிவெகுளக் கான்யாற்றொலிபோலககடுமாவாற்பூட்டியகாதலர்தேரொண்டொடியுடையதோழின்மேனிகுளிர்ப்பவாராநின்றது—எ-று. (௰)

புணர்தருசெல்வந்தருபாக்குச்சென்றார்
வணரொலியைம்பாலாய்வல்வருதல்கூறு

மண்ர்த்தெழும்பாம்பினறலைபோற்புணர்கோடல்
பூங்குலையிந்தபுறவு.

(இதுவுமது.)

எ-து பொருந்தியசெல்வத்தைக் கொளவேண்டிச்சென்றார்வினைக்குதன்முத்தலைவமபாலினையுடையாய் விரைந்துவருதலைக்கூறுகின்றன, வண்ணங்கெழுநபாம்பின்படம்போலப்பொருந்திய கோடல்களாற்பூங்குலையினப்பட்டபுறவுகள்—எ-று-ஐம்பால்-பெண்மயிர்.(கக)

மைமெழிலுண்கண்மயிலன்னசாயலாய்
ஐயந்தீர்காட்சியவர்வருதறிண்ணிதா
கெய்யணிகுஞ்சரம்போலவிருங்கொண்மூ
வைகலும்மேரு வலம.

(இதுவுமது.)

எ - து மையையுமெழிலையுமுடையவுண்கண்ணாய் மயிலன்னசாயலாய் ஐயந்தீர்ந்தவறிவினையுடைய நங்காதலர் வருதல்மெய்ம்மை, நெய்யணிந்தயானைகள் போலப்பெரியமுகில்களோடேமலமாகவெழாநின்றவாதலான். (கஉ)

ஏந்தெழில்லல்குலாயேமார்ந்தகாதலர்
கூந்தல்வனப்பிற்பெயறூழவேந்தர்
களிறெறிவாளரவம்போலக்கண்கவ்வி
யொளிறுடுமின்னு மழை.

(இதுவுமது.)

எ - து. அழகினையுடைய வேங்கையவல்குலினையுடையாய் துணையோடு புணர்ந்தின்பமுற்றகாதலராகிய மகளிர்கூந்தலழகுபோலப்பெய்ய வரசர்களிற்றைய ந்தவாளரவம்போலக்கண்டார் கண்ணைவவ்வியொளிவிட்டுமின்னுகின்றது மழை ஆதலான்வருவா. (கங)

செலவுந்தரல்வேண்டிச்சென்றநங்காதலர்
வல்லேவருதறெளிந்தாம்வயங்கிழாய்
முல்லையிலங்கெயிறீனநறுந்தண்கார்
மெல்லவினிய நகும்.

(இதுவுமது.)

எ - து செல்வந்தேடிக்கொள்ளவேண்டிப்போயினநங்காதலர்விரைந்துவருதலைத்தேறினும்விளங்காநின்றநலணிகளையுடையாய் முல்லைக்கொடிகள் (மகளி)ரிலங்கெயிறுபோலவிரும்வகை யழகியகுளிர்ந்தமுகில்கள்மெல்லவினியவாகவொலியாநின்றன. (கச)

திருந்திழாய்காதலர்தீர்குவரலலர்
குருந்தின்குவியிணருள்ளுறையாகத்
திருந்துளிவண்டோடிருந்தும்பி
யின்குழலூதும்பொழுது.

(இதுவுமது.)

எ - து திருந்தியவணிகளையுடையாய் நங்காதலர்

கம்மைமீண்குவரல்லர் குருந்தினதுகுவிந்தவிணரினி டமே துணைக்குறையுளாகவிருந்து திருக்கிப்பிளிதாயிருக் குவிளியென்னும்பண்ணைவண்டுகளபாடப் பெரியதும் பிகளினியகுழல்போலூதாநின்றவிக்காலத்தின்கண். ()

கருங்குயில்கையறமாமயிலாலப்
பெருங்கலிவானமுரறும்பெருந்தோ
ளசோகினிளந்தளிரன்னநின்மேனிப்
பசலைப்பழங்கண்கொள.

(இதுவுமது.)

எ - று கருங்குயில்கள்செயலற்றுத்துன்பமுறவுமா மயில்கள்களித்தாடும்வகை பெரியகலிப்பையுடைய ம ழைமுழங்காநின்றது பெருந்தோளினையுடையாய் நின தசோகின்தளிரன்னமேனியிற் பசந்தபசலை மெலிவு கொள்ளும்படி—எ-று. பழங்கண்-மெலிவு. (கக)

அறைக்கலிருவரைமேற்பாம்புசவட்டி
யறைக்குரலேறொடுபௌவம்பருகி
யுறைத்திருள்கூர்ந்தன்றுவானமடபிறை
பிறைத்தகைகொண்டன்றுபேதைநுதல்

(இதுவுமது.)

எ - று கடனீரைப்பருகிப் பறையொலிபோன்றி ருக்க வொலியையுடையவுருமேற்றோடுகூடி பாம்புக ளைவருத்தி யறைக்கலிருவரைமேற்பெய்திருள்மிக்கது

இல் ஆகலாற்பிறைபின்றகைமையைக்கொண்டதே தாய்ப்பிணைதுறந்தல்—எ-று. (௧௭)

கல்பயில்கானங்கடந்தார்வரவாங்கே
நல்லிசையேறொடுவானநீறிபச்
செல்வர்மனைபோற்கவினின்றநல்கூர்ந்தார்
மேனிபோற்புல்லென்றகாடு.

(இதுவுமது.)

எ-து மலைநெருங்கியகானத்தைக்கடந்துபோயினார்வருமவகை யவர்வருங்காலமலந்தவாறே மிக்கவோசையையுடையவுருமேறுடனேமேகங்களுலகுகெல்லாமெப்பநிறலாற்செல்வர்துமனைபோலவழகைத்தகதனமுன்புகல்கூர்ந்தார்மேனிபோலப்புல்லென்றிருந்தகாடுகள்—எ-று. (௧௮)

நாஞ்சில்வலவனிறம்போலப்பூஞ்சினைச்
செங்கான்மராஅந்தகைந்தனபைங்கோற்
றொடிபொலிமுன்கையாடோடுளையாவேண்டி
நெடுவினிடைச்சென்றம்மதன்னெஞ்சு.

(வினைமுற்றியதலைமகன்பாகற்குச்சொல்லியது.)

எ-து கலப்பைப்படை வென்றியையுடையவெள்ளியோனிறம்போலப்பூவொடுமலையுஞ்செவ்வியதாள்களையுமுடைய மராமரங்கள்விரிந்தனவாதலாற்பசுமையுடையகோற்றொடியொலிக்குமுன்கையையுடை

யா யோர்க ளெனக்குத்துணையாகவேண்டி நெடியகானத்தைக்கடந்துசென்றதென்மனம்-எ-று. (கக)

விறுசால்வேந்தன்வினையுமுடிந்தன
வாறும்பதமினியவாயினவருமணி
நாகமுழங்கச்செருமன்னர்சேனைத்
தார்போலச்செல்லுமழை.

எ-து சிறப்பமைந்தவேந்தனுடைய வினைகளு முடிந்தன, வழிகளுஞ்செவ்வியினவாயின, வருமணிநாகங்கள்வருந்தும்வகை யுருமேற்றோடுகூடிச்செருமன்னர்சேனைத்தாரைப்போலச்செல்லாநின்றதுமுகில்- எ

பொறிமாண்புனைதிண்டேர்போந்தவழியே
சிறுமுல்லைப்போதெல்லாஞ்செவ்வி-நறுநுதற்
செல்வமழைத்தடங்கட்சின்மொழிப்பேதைவாய்
முள்ளெயிறேய்ப்பவடிந்து.

(இதுவுமது.)

எ - து எந்திரச்செய்கைகளான் மாட்சிமைப்பட்டபுனைதிண்டேர்போந்தவழியே சிறுமுல்லைப்போதுகளெல்லாஞ் செவ்வியாகியவழகியநுதலையுஞ் செல்வமழைபோன்றிருந்த கண்ணினையு மெல்லியமொழியினையுமுடையபேதைவாயின்கண் முள்ளெயிறுகளைவடிவுபெற்ற-எ-று. (நின்றது-என்னும்பயனிலை, தொக்கது

இளையருமீர்க்கட்டியரவுளையணிந்து
புல்லுண்கலிமாவும்பூட்டியநல்லா
ரிளநலம்போலக்கவினிவளமுடையா
ராக்கம்போற்பூத்தனகாடு.

(இதுவுமது.)

எ-து சேவகரு மழகிதாகக்கட்டியுதேத்தலைச்செ ய்ய சாமரையைத்தலைமேன்கரையணிந்து புல்லுண்டகலி மாவினையுந்தேரோடுபூட்டுதலைச்செய்யும்வகை நல்லா ராகியமகளிரிளநலம்போலவழகுபெற்று வருவாயுடை யாருடையசெல்வம்போலப்பூத்தனகாடு-எ-று. (உஉ)

கண்டிரணமுத்தங்கடுப்பப்புறவெல்லாந்
தண்டுளியாலிபுரளப்புயல்கான்று (லோ
கொண்டெழில்வானமுங்கொண்டன்றெவன்கொ
லொண்டொடியூடுநிலை.

எ. து தோழிதலைமகட்குப் பருவங்காட்டிவற்பு றுத்தியது-எ-று. (உக.)

எல்லாவினையுங்கிடப்பவெழுநெஞ்சே
கல்லோங்குகானங்களிற்றின்மதநாறும்
பல்லிருங்கூந்தல் பணிநோனாள்கார்வான்
மெல்லவுந்தோன்றுஞ் செயல். (உச)

கருங்காலவாகின்போரிப் போரவரும்
விரைந்தீர்ந்தண்புறவிற்றெறுவிமலர்ந்தன

சேர்ந்தனைசெய்குறைவாராவளைறு
கூர்ந்தபசலையவட்கு. (உ௫)

நலமிகுகார்த்திகைநாட்டவரிட்ட
தலைநாள்விளக்கிற்றகையுடையவாகிப்
புலமெலாம்பூத்தனதோன்றிசின்மொழி
தூதொடுவந்தமழை. (உ௬)

முருகியம்போல்வானமுழங்கியிரங்க
குருகிலைபூத்தனகானம்பிரிவெண்ணி
யுள்ளாதகன்றாரென்றூடியாம்பாராட்டிப்
பள்ளியுட்பாயுட்பசப்பு. (உ௭)

இமிழிசைவானமுழங்கக்குமிழின்பூப்பொன்செய்
குழையிற்றுணராங்கத்தன்பதஞ்செல்வி
யுடையதாநெஞ்சேகாதலியூர
கல்லைவயமுழ்கச்செலற்கு. (உ௮)

பொங்கருஞாங்கர்மலர்ந்தனதாங்காக்
கைவளைகொன்றூரும்பகைகொண்ட
வெவ்வலத்திசைகளும்வந்தன்றநாளுஞ்
செலவியுடையசுரம். (உ௯)

வரைமல்கவானஞ்சிறப்பவுறைபோழ்க
திருவிலநீமபெயலுழந்திலாகாற
வூதையுளருகுறுக்தணைகாப்பேதை
பெருமடமாட்டுளைத்து. (௩௰

கருஞ்சேனிக்கத்தானைக்கருங்கனிச்சேர்ந்த
தெருமையெழிலேறெறியவர்சூடிச்
செருமிருமள்ளரிற்செம்மாக்குஞ்செவ்வி
இருநுதறகியாஞசெய்குறி. (௧௧)
காலோடக்கொண்டகெடாஅப்புகழ்வேட்கைச்
செல்வர்மனம்போற்படாது
மகிழ்வண்டுபாண்முரலுங்கானம்
பிடாஅப்பெருந்தகைநற்கு. (௧௨)
கடனீர்முகந்தகமஞ்சூலெழிலி
குடமலையாகத்துக்கொளப்பிறக்கு
மிடமெனவாங்கேகுறிசெய்தேம்பேதை
மடமொழியெவ்வங்கெட. (௧௩)
விரிதிரைவெள்ளம் வெறுப்பப்பருகிப்
பெருவிறல்வானம்பெருவரைசேருங்
கருவணிகாலங்குறித்தார்திருவணிந்த
வொண்ணுதல்மாதர்திறத்து. (௧௪)
சென்றநகைகாதலார்சேணிகந்தாரொண்ணி
யொன்றியநோயொடியம்மைபலகூர
வென்றிமுரசினிரங்கியெழிலவான
மின்றுமிரங்குமிவட்கு. (௧௫)
சிரல்வாய்வனப்பினவாகிநிரனொப்ப
வீர்ந்தண்டளவந்தகைத்தனசீர்த்தக்க

செல்லுமழைமதர்க்கட்டின்மொழிப்பேதையூர்
நல்கீந்ததாகநமக்கு. (கசு)
கருங்கடன்மேய்ந்தகமஞ்சூலெழிலி
யிருங்கல் லிருவரையேறியுயிர்க்கும்
பெரும்பதக்காலையும்வாரார்கொல்வேந்த
னருகதொழிலவாய்த்தநமர் (கஎ)
புகர்முகம்பூழிபுரளவுயர
நிலைவெஞ்சினவேழமபிடியோடிணைதழத்
தண்பதக்காலையும்வாரார்வெவன்கொலோ
வொண்டொடி யூடுநிலை. (கஅ)
அலவன்கணேய்ப்பவரும்பின்றவிழ்ந்த
கருங்குரனேச்சிப்பசுந்தழைசூடி
யிரும்புனமேர்க்கடிகொண்டார்பெருங்கவலை
யாகின்றுநம்மூரவர்க்கு.

(இதுவுமது.)

எ-து அலவனது கண்ணினையேய்ப்பவரும்பினை யின்று பின்மலர்ந்த கருங்கதிரினையுடைய நொச்சிப்பசுந்தழையைச்சூடிப்பெரும் புனங்களையுமவர்புதிதாகவே குழுவிக்கத்தொடங்கினார்கள் ஆதலானம்மூரின்கட்பெரியவலராயிற்று நமகாதலராகியவர்க்கு—எ-று. (கக)

வநதனஞ்செய்குறிவாராரவொன்று
கொந்தவொருத்திக்குக்கோய்நீர்மருந்தாகி.

மிந்நின்கருவண்ணங்கொண்டெழில்வான்
கநதுமென்பேதைநுதல்.

எ-து பருவங்காட்டித்தலைமகளைத்தோழிவற்புறுத்தியது. அவர்செய்குறிகளாறுந்தன, அவர்வருகிலரென்று தேர்ந்தவொருத்தியாகிய நினக்குநோய் தீர்க்குமருந்தாகியநின்கனியினிறம்போலக் கருநிறத்தைக்கொண்டெழில்வான், மெல்லியபேதாய்நின்னுடையநுதலினியொளிபெறநந்தும்—எ-று. ஈங்கென்பதனை-மிகவென்றுகுறுக்கியது. (௩0)

கார்நாற்பதுமூலமும்உரையும்

முற்றிற்று.

இந்நூலில்-உ௬-வது செய்யுள்முதல்-௬அ-வது, செய்யுளவரைபிரதிகளிலுரைகாணபபடவிலலை. கல்விச்செல்வமிக்குடையார் தமது பிரதிகளிலுளதாயதெரிவிப்பாராயின (உ) வது முறையச்சிடுவதுடன் அச்சிட்டுத்தெரிவிப்போர்பெயரையும வெளியிடப்படும.

இங்ஙனம்,

கொ-சண்முகசுந்தரமுதலியா